# ஆறாம் வகுப்பு
# தமிழ்
# செய்யுள் பகுதி

1. இராமலிங்க அடிகளாhர் சிறப்புப் பெயர் – திருவருட் பிரகாச வள்ளளலார்
2. இராமலிங்க அடிகளார் பிறந்த ஊர் – கடலூர் மாவட்டம் மருதூர்
3. இராமலிங்க அடிகளார் பெற்றோர் - இராமையா, சின்னம்மையார்
4. இராமலிங்க அடிகளார் எழுதிய நூல்கள் - ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம்
5. இராமலிங்க அடிகளார் பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டுள்ள பெயர்- திருவருட்பா
6. சமரச சன்மார்க்க நெறியை வழங்கியவர் - இராமலிங்க அடிகளார்
7. அறச்சாலை அமைத்தவர் - இராமலிங்க அடிகளார்
8. அறிவுநெறி விளங்;க ஞானசபை நிறுவியர் - இராமலிங்க அடிகளார்
9. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர் - இராமலிங்க அடிகளார்
10. இராமலிங்க அடிகளார் வாழ்ந்த காலம் - 05.10.1823 முதல் 30.1.1874
11. திருக்குறள் இயற்றியவர் – திருவள்ளுவர்
12. திருவள்ளுவரின் காலம் - கி.மு.31
13. திருவள்ளுவரின் சிறப்பு பெயர் – செந்நாப்போதார், தெய்வப்புலவர், நாயனார்
14. திருக்குறளின் முப்பெரும் பிரிவுகள் - அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துபால்
15. திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை – 133
16. திருக்குறளில் உள்ள திருக்குறள்களின் எண்ணிக்கை – 1330
17. திருக்குறளின் சிறப்புப் பெயர்கள் - உலகப்பொதுமறை, தமிழ்மறை, பொதுமறை
18. கி.பி.2012ன் திருவள்ளுவர் ஆண்டு – 2043
19. முயற்சி திருவினையாக்கும் எனக்கூறியவர் – திருவள்ளுவர்
20. பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று – நாலடியார்
21. நாலடியாரில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை – 400
22. நாலடியாரின் வேறுபெயர் – நாலடி நானூறு
23. சமணமுனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு – நாலடியார்
24. சங்க நூல்கள் எனப்படுபவை – பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்
25. பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் இவ்வாறு அழைக்கப்படும் - மேல்கணக்கு நூல்கள்

26. சங்க நூல்களுக்குப்பின் தோன்றியவை – பதிணென்கீழ்க்கணக்கு
27. பதிணென் என்பதன் பொருள் - 18
28. பதிணென்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலனவை – அறநூல்கள்
29. பாட்டுக்கொரு புலவன் என அழைக்கப்படுபவர் – பாரதி
30. வெள்ளிப்பனிமலையின் மீது உலவுவோம் என பாடியவர் – பாரதி
31. பாரதி வாழ்ந்த காலம் - 11.12.1882 முதல் 11.09.1921
32. நான்மணிக்கடிகை நூலாசிரியரின் பெயர் – விளம்பிநாகனார்
33. விளம்பி என்பது – ஊhபெயர்
34. கடிகை என்பதன் பொருள் - அணிகலன்
35. நான்மணிக்கடிகை என்பதன் பொருள் - 4 மணிகள் கொண்ட அணிகலன்
36. நான்மணிக்கடிகையில் உள்ள ஒவ்வொரு பாட்டிலும் உள்ள அறக்கருத்துக்களின் எண்ணிக்கை – 4
37. இசையமுது எனும் பாடலை எழுதியவர் பெயர் – பாரதிதாசன்
38. புரட்சிக்கவிஞர், பாவேந்தர் என புகழப்படுபவது – பாரதிதாசன்
39. பாரதியின் கவிதை மீது கொண்ட காதலால் தம் பெயரை மாற்றிக் கொண்டவர் – பாரதிதாசன்
40. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் - பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு
41. பாரதிதாசன் வாழந்த காலம் - 29.4.1891 முதல் 21.04.1964
42. பழமொழி நானூறு இயற்றியவர் பெயர் – முன்றுறை அரையனார்
43. முன்றுறை என்பது – ஊர்ப்பெயர்
44. அரையன் என்பதன் பொருள் - அரசன் (அ) குடிப்பெயர்
45. பதிணென்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று – பழமொழி நானூறு
46. பழமொழி நானூற்றில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை – 400
47. ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம் பெறும் நூல் - பழமொழி 400
48. ஆற்றுணா வேண்டுவது இல் எனும் பழமொழியின் பொருள் - கற்றவனுக்குக் கட்டுச் சோறு வேண்டா.
49. சித்தர் பாடல் என்பதன் ஆசிரியர் – கடுவெளிச் சித்தர்
50. 400 ஆண்டுகளுக்கு முன் தமிழக காடுமலைகளில் வாழந்தவர்கள் - சித்தர்கள்
51. பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுணிச் சித்தர் என்பன அனைத்தும் இவ்வகைப் பெயர்கள் - காரணப்பெயர்கள்
52. உருவ வழிபாடு செய்யாமல் வெட்டவெளியையே கடவுளாக வழிபட்டவர் – கடுவெளிச்சித்தர்
53. எளிய சொற்களில் அறிவுரைகளாகக் கூறியவர் – கடுவெளிச்சித்தர்
54. புறநானூற்று ஆசிரியர்களில் ஒருவர் – ஔவையார்

55. 2000 ஆண்டுகள் பழமை உடையது – சங்க இலக்கியம்
56. தமிழர்களின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை அறிய உதவும் நூல் - புறநானூறு
57. சங்கப் புலவர்களில் ஒருவர் – ஔவையார்
58. அதியமானின் நண்பர் – ஔவையார்
59. அரிய நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர் – ஔவையார்
60. சங்ககால பெண் கவிஞர்களுள் மிகுதியான பாடல்கள் பாடியவர் – ஔவையார்
61. சங்கப்பாடல் பாடிய ஔவையாரும் ஆத்திச்சூடி பாடிய ஔவையாரும் - வேறானவர்
62. திண்ணையை இடித்துத் தெருவாக்கு எனும் புதுக்கவிதையை எழுதியவர் – தாராபாரதி
63. எழுச்சிமிக்க கவிதைகள் எழுதுவதில் வல்லவர் – தாராபாரதி
64. தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர் – தாராபாரதி
65. தாராபாரதியின் நூல்கள் - புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு
66. தாராபாரதி வாழ்ந்த காலம் - 26.2.1947 முதல் 13.5.2000
67. கடலில் எதுவாக இருக்க வேண்டும் என்று தாராபாரதி கூறுகிறார்? – முத்து
68. பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று – திருக்குறள்
69. உ.வே.சா.தம் வாழ்நாள் முழுவதும் ஒய்வில்லாமல் இப்பணியை மேற்கொண்டார்- தமிழ்மணி
70. சாதிஇரண்டொழிய வேறில்லை எனக்கூறிய தமிழ்மகள் - ஔவையார்
71. நாலடியாரின் ஆசிரியர் – சமண முனிவர்
72. மனைக்கு விளக்கம் என நான்மணிக்கடிகை கூறுவது – பெண்
73. அன்புமிக்க புதல்வர்களுக்கு விளக்கு என கூறுவது – கல்வி
74. செய்யும் தொழிலே தெய்வம் என்னும் பாடலை எழுதியவர் – பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்
75. மக்கள் கவிஞர் என அழைக்கப்படுவர் – பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
76. எளிய தமிழில் கவிதைகளை இயற்றியவர் – பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
77. திரையிசை பாடல்களை இயற்றியவர் – பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
78. பொதுவுடைமை சிந்தனைகளை பரப்பியவர் – பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

www.TNPSCROCK.in

79. கல்யாண சுந்தரம் பிறந்த ஊர் – பட்டுக்கோட்டை அருகே செங்கப்படுத்தான் காடு
80. கல்யாண சுந்தரம் வாழ்ந்த காலம் - 13.4.1930 முதல் 8.10.1959
81. தனிப்பாடல் என்னும் செய்யுளை இயற்றியவர் - இராமச்சந்திரக் கவிராயர்
82. புலவர் பலரின் பாடல்கள் தொகுப்பு பெயர் – தனிப்பாடல் திரட்டு
83. துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர் - இராமச்சந்திரக்கவிராயர்
84. அந்தக்காலம் இந்தக்காலம் என்னும் செய்யுளை இயற்றியவர் – உடுமலை நாராயணகமவி
85. திரைப்படபாடல் ஆசிரியர் – உடுமலை நாராயணகவி
86. நாடக எழுத்தாளர் – உடுமலை நாராயணகவி
87. சமுதாய பாடல்களை எழுதியவர் – உடுமலை நாராயணகவி
88. சீர்திருத்த கருத்துக்களை பரப்பியவர் – உடுமலை நாராயணகவி
89. பகுத்தறிவுக் கவிராயர் எனப்படுபவர்- உடுமலை நாராயணகவி
90. உடுமலை நாராயணகவி வாழ்ந்த காலம் - 25.9.1899 முதல் 23.5.1981
91. புலவரின் வறுமையை பாடியவர் - இராமச்சந்திரக்கவிராயர்
92. குற்றாலக்குறவஞ்சியை இயற்றியவர் – திரிகூட ராசப்பக்கவிராயர்
93. குறவஞ்சி என்னும் இலக்கிய வகையை சார்ந்த நூல் - திருக்குற்றாலக் குறவஞ்சி
94. ஓசை நயமிக்க பாடல்கள் மிகுந்த நூல் - குற்றாலக்குறவஞ்சி
95. மரபும் பழைய குடையும் என்னும் சிலேடைப்பாடலை இயற்றியவர் – அழகிய சொக்கநாதப் புலவர்
96. அழகிய சொக்கநாதப்புலவர் பிறந்த ஊர்- திருநெல்வேலியில் உள்ள தச்சநல்லூர்
97. 25க்கும் மேற்பட்ட தனிப்பாடல்களை இயற்றியவர் – அழகிய சொக்கநாதப் புலவர்
98. அழகிய சொக்கநாதப் புலவர் காலம் - கி.பி.19ம் நூற்றாண்டு
99. தனிப்பாடல் திரட்டில் உள்ள சிலேடைப்பாடலில் ஒன்று – மரபும் பழைய குடையும்
100. ஒரு சொல்லோ தொடரோ இருபொருள் தருமாறு பாடுவது – சிலேடை
1. “சிலேடை” ன் மறுபெயர் - இரட்டுறமொழிதல்
2. இரட்டுறமொழிதல் என்பதன் பொருள் - இருபொருள் பட பாடுவது
3. குறவஞ்சியில் ஓடக் காண்பது – வெள்ளம்
4. புலம்பக் காண்பது – குழந்தைகள் காலில் அணியும் கிண்கிணிகள்
5. ஒடுங்கக் காண்பது – தவம் செய்வோர் உள்ளம்

6. வாடக் காண்பது – பெண்களின் மெல்லிடை
7. தாமரை என்பதன் மற்றொரு பொருள் - தாவுகின்ற மான்.

www.TNPSCROCK.in

More TNPSC, TET, TRB - Online Exam - PDF - MP3 Materials Visit : www.TNPSCROCK.in